**ஜனவரி – 29**

# TNPSC துளிகள்

- ஞானபீட விருது பெற்ற எழுத்தாளர் அமிதவ் கோஷ் 'Wild Fictions' எனப்படும் தனது மிகச் சமீபத்திய புத்தகத்தினை வெளியிட்டுள்ளார்.
- மதிப்புமிக்க 2025 ஆம் ஆண்டு FIDE சதுரங்க உலகக் கோப்பைப் போட்டியை இந்தியா நடத்த உள்ளது.
- 2025 ஆம் ஆண்டு புது டெல்லி உலகப் புத்தகக் கண்காட்சி ஆனது, கல்வித் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்தியத் தேசியப் புத்தக அறக்கட்டளையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்தியாவில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான நிதியியல் மற்றும் புதுமை மிக்க பொருளாதார மாதிரிகள் குறித்து விவாதிப்பதற்காக குஜராத் மாநில அரசானது முதலாவது சர்வதேச ஒலிம்பிக் ஆராய்ச்சி மாநாட்டினை ஏற்பாடு செய்ய உள்ளது.
- நிதி மோசடியை எதிர்த்துப் போராடுவதற்காக வேண்டி வங்கிகளானது பரிவர்த்தனை சார்ந்த அனைத்து அழைப்புகளுக்கும் '1600xx' என்ற எண் தொடரையும், விளம்பரம் சார்ந்த அழைப்புகளுக்கு '140xx' என்ற ஒரு எண் தொடரையும் பயன்படுத்த வேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவில் பயன்படுத்தப்படாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கான வீதவரி நிதிகள்

**Top 3 states**

| (₹ crore) | Cess Collected | Used | Share utilised (%) |
|---|---|---|---|
| Kerala | 3,457 | 3,457 | 100.00 |
| Odisha | 4,302 | 3,636 | 84.52 |
| Madhya Pradesh | 5,302 | 4,468 | 84.27 |

**Bottom 3 states**

| (₹ crore) | Cess Collected | Used | Share utilised (%) |
|---|---|---|---|
| Andhra Pradesh | 3,778 | 582 | 15.4 |
| Gujarat | 5,549 | 1,012 | 18.2 |
| Assam | 2,548 | 609 | 23.9 |

- பல்வேறு மாநிலங்களின் கட்டிடம் மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்களுக்கான நல வாரியங்கள் ஆனது இன்னும் 70,744.16 கோடி ரூபாய் மதிப்புள்ள வீத வரியைப் பயன்படுத்தவில்லை.
- தொழிலாளர்களின் நலனுக்காக கட்டுமான நிறுவன முதலாளிகளிடமிருந்து வீதவரி வசூலிக்கப்படுகிறது.
- 2005 ஆம் ஆண்டில் கட்டிடம் மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பு மற்றும் பணி நிபந்தனைகளை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் அமலபடுத்தப் பட்டதிலிருந்து, நல வாரியங்கள் 1,17,507.22 கோடி ரூபாயை வசூலித்துள்ளன.

- 1996 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இந்த ஒரு சட்டம் ஆனது, மாநில அரசுகளால் அமைக்கப் பட்ட கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் ஆனது, ஒரு முதலாளி மூலம் மேற்கொள்ளப்படும் கட்டுமானச் செலவில் "சுமார் 2 சதவீதத்திற்கு மிகாமலும் அல்லது 1 சதவீதத்திற்குக் குறையாமலும்" முதலாளிகளிடமிருந்து வீத வரி வசூலிக்க அதிகாரம் அளிக்கிறது.
- 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதி வரை 36 மாநில நல வாரியங்களில் சுமார் 5,73,48,723 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர்.
- மகாராஷ்டிரா மாநிலமானது, கடந்த 19 ஆண்டுகளில் வசூலித்த வீத வரியில் இருந்து 13,683.18 ரூபாயினைச் செலவிட்டது.
- அதைத் தொடர்ந்து கர்நாடகா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை முறையே 7,921.42 கோடி ரூபாய் மற்றும் 7,826.66 கோடி ரூபாயை தொழிலாளர்களுக்கு வழங்கியுள்ளன.
- மகாராஷ்டிரா மாநிலத்தின் வீத வரிக் கணக்குகளில் 9,731.83 கோடி ரூபாய் இருப்பு உள்ளது.
- கர்நாடகா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் முறையே 7,547.23 ரூபாய் மற்றும் 6,506.04 ரூபாய் இருப்பு வைத்துள்ளன.

# சர்வதேசச் செய்திகள்

## WEF மன்றத்தின் GPAP முன்னெடுப்பில் 7 புதிய உறுப்பினர்கள்




- உலகளாவிய நெகிழிக் குறைப்பு நடவடிக்கை கூட்டாண்மை (GPAP) என்பது உலகப் பொருளாதார மன்றத்தினால் தொடங்கப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.
- இது சமீபத்தில் சுமார் 25 நாடுகளை உள்ளடக்கிய வகையில் அதன் வலையமைப்பை விரிவுபடுத்துவதன் மூலம் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- அங்கோலா, வங்காளதேசம், காபோன், கௌதிமாலா, கென்யா, செனேகல் மற்றும் தான்சானியா ஆகிய ஏழு புதிய நாடுகள் இந்த முக்கிய கூட்டாண்மை முன்னெடுப்பில் இணைந்துள்ளன.
- நெகிழித் துறை ஆனது ஆண்டுதோறும் சுமார் 1.8 பில்லியன் டன் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்திற்கு காரணமாக உள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும், சுமார் ஆறு மில்லியன் டன் நெகிழிக் கழிவுகள் பெருங்கடல்களில் கலக்கின்றன என்பதோடு அதற்கும் மேலான அளவிலான நெகிழிகள் நிலத்தினை

மாசுபடுத்துகின்றன.

### அமெரிக்கா மற்றும் OECD உலகளாவிய வரி ஒப்பந்தம்

- டொனால்ட் டிரம்ப், அமெரிக்காவை OECD அமைப்பின் உலகளாவிய வரி ஒப்பந்தத்திலிருந்து வெளியேற்றுவதற்கான ஒரு முக்கியச் செயலாக்க ஆணையினை வெளியிட்டார்.
- உலகளாவிய வரி ஒப்பந்தம் ஆனது, பன்னாட்டு நிறுவனங்கள் தாங்கள் செயல்படும் நாடுகளில் நியாயமான பங்கிலான வரிகளை செலுத்துவதை உறுதி செய்வதற்காக வடிவமைக்கப்பட்டதாகும்.
- ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன் மற்றும் பிற நாடுகள் 15 சதவீதத்திலான உலகளாவிய பெரு நிறுவன குறைந்தபட்ச வரியை ஏற்றுக் கொண்டுள்ளன.
- அமெரிக்காவில் சுமார் 10% உலகளாவிய குறைந்தபட்ச வரி நிர்ணயம் உள்ளது என்ற நிலையில் டிரம்ப் ஆட்சியின் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றான 2017 ஆம் ஆண்டு வரி குறைப்புத் தொகுப்பின் ஒரு பகுதி இதுவாகும்.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்


### புறக் கருவி சார்ந்த குளிரூட்டல் அடிப்படையிலான ஸ்கிராம் ஜெட் சோதனை




- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, சமீபத்தில் இந்தியாவில் மிக முதல் முறையாக 120 வினாடிகளுக்கு மீயொலி வேகத்திலான எரிப்பு ராம்ஜெட் என்ஜினின் நிலம் சார் செயல்பாட்டுச் சோதனையை செயல் விளக்கிக் காட்டியது.

- அடுத்தத் தலைமுறைத் தொழில்நுட்பத்திலான மீயொலி வேகத்திலான எறிகணை வகைகளை உருவாக்குவதில் பாதுகாப்பு அமைச்சகம் (MoD) இதை ஒரு முக்கியமான மைல்கல் என்று கூறியுள்ளது.
- மீயொலி வேகத்திலான எறிகணைகள் 'மாக் 5' எனும் ஒலியின் வேகத்தினை விட ஐந்து மடங்கு அதிக வேகத்தில் பயணிக்கும் மேம்பட்ட ஆயுதங்களின் வகையாகும்.
- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், DRDO ஆனது ஐதராபாத்தில் மேம்பட்ட மீயொலி காற்றோட்டச் சோதனை ஊடக (HWT) மையத்தினைத் திறந்து வைத்தது.

## CDSCO – கார்டெமி




**Immuneel Therapeutics launches Qartemi, India's first global CAR T-cell therapy for adult B-cell non-Hodgkin lymphoma (B-NHL). This personalized therapy offers advanced, affordable cancer treatment, addressing critical gaps in India's immunotherapy landscape. With 83.3% ORR in trials, it's redefines precision medicine and provides new hope for aggressive blood cancer patients.**

- பெங்களூருவில் உள்ள உயிரித் தொழில்நுட்பம் புத்தொழில் நிறுவனமானது, நிணநீர்க் குழியப் புற்றுநோய் (B-செல் ஹாட்ஜ்கின் எதுவும் அல்லாத லிம்போமா (B-NHL)) வகை நோயாளிகளுக்கு கார்டெமி எனப்படும் CAR-T செல் சிகிச்சையினை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இந்த "உயிரி சார் மருந்து" ஆனது இந்தியாவில் நோய் வளர்ச்சியின் மேம்பட்ட நிலை அல்லது மீண்டும் மீண்டும் வரும் நிலையில் உள்ள இரத்த புற்றுநோய் நோயாளிகளுக்குப் பயன்படுத்தப்படுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இது மிகவும் நீண்டகால நோயெதிர்ப்பு சக்தியைக் கொண்டிருப்பதற்காக வேண்டி உயிரணுக்களிலிருந்து தயாரிக்கப் படுவதால், ஒத்து மிக வழக்கமான ஒரு இரசாயன மருந்திலிருந்து வேறுபட்டது.
- இந்தியவானது, இரத்தப் புற்றுநோய், நிணநீர்க் குழியப் புற்றுநோய் மற்றும் பல்வேறு மைலோமா பாதிப்புகளால் ஆண்டுதோறும் சுமார் 1,20,000 புதிய பாதிப்புகளையும் 70,000க்கும் மேற்பட்ட உயிரிழப்புகளையும் எதிர்கொள்கிறது.


## ரஷ்யாவில் காந்த வட துருவம்

- இந்த துருவம் ஆனது முதன்முதலில் கனடா நாட்டிலிருந்து சுமார் 400 கிலோமீட்டர் தொலைவில் 1831 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

- இருப்பினும் அவை அன்றில் இருந்து இன்று வரையில் ரஷ்யாவை நோக்கி தொடர்ந்து நகர்ந்து வருகின்றன என்பதோடு மேலும், இன்றுவரை நூறு ஆண்டுகளில் 400 கிலோ மீட்டருக்கு மேல் நகர்ந்துள்ளன.
- காந்த வட துருவம் நகரும் வேகம் மாறிக் கொண்டே இருக்கிறது.
- 1990 முதல் 2000 ஆம் ஆண்டு வரையில், இந்தத் துருவம் ஆண்டிற்கு 55 கிலோமீட்டர் என்ற விகிதத்தில் நகர்ந்தது.
- 2015 ஆம் ஆண்டில் இதன் வேகம் ஆண்டிற்கு சுமார் 35 கிலோமீட்டராகக் குறைந்தது.




## சூரிய ஒளியின்றி உருவாக்கப்பட்ட ஆக்ஸிஜன் மூலக்கூறு




- பசிபிக் பெருங்கடலின் ஆழமான பகுதியில் ஒளியின்றி உருவாக்கப்பட்ட ஆக்ஸிஜன் மூலக்கூறு காணப்படுவதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர் என்ற நிலையில் இது புவியில் ஆக்ஸிஜன் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது என்பது குறித்த நீண்ட காலக் கருத்துக்கள் மீது சவால் விடுக்கிறது.

- இதுவரையில், சூரிய ஒளி அவசியமான ஒளிச்சேர்க்கை என்ற ஒரு செயல்முறை மூலம் மட்டுமே ஆக்ஸிஜன் உருவாக்கப்படுகிறது என்று கருதப்பட்டது.
- ஹவாய் மற்றும் மெக்சிகோ இடையே உள்ள கடல் தளத்தின் ஒரு பரந்த தட்டையான பகுதியான கிளாரியன்-கிளிப்பர்டன் மண்டலத்தில் இந்த ஒரு நிகழ்வு கண்டுபிடிக்கப் பட்டது.
- இந்த ஆழங்களில் நிகழும் ஆக்ஸிஜன் உற்பத்தியானது இயற்கையான மின் கலங்கள் போல செயல்படும் இயற்கையாக நிகழும் பல் உலோக முடிச்சுகள் மூலம் நிகழ்கிறது.
- அவை கடல் நீரை ($H_2O$) மின்னாற்பகுப்பு மூலம் ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜனாகப் பிரிக்கின்றன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலக ஆயுத ஆற்றல் குறியீடு 2025

| Rank 2025 | Country | Power Index 2025 | Total Military Personnel 2025 (est) |
|---|---|---|---|
| 1 | USA | 0.0744 | 21,27,500 |
| 2 | Russia | 0.0788 | 35,70,000 |
| 3 | China | 0.0788 | 31,70,000 |
| 4 | India | 0.1184 | 51,37,550 |
| 5 | South Korea | 0.1656 | 38,20,000 |
| 6 | UK | 0.1785 | 11,08,860 |
| 7 | France | 0.1878 | 3,76,000 |
| 8 | Japan | 0.1839 | 3,28,150 |
| 9 | Turkiye | 0.1902 | 8,83,900 |
| 10 | Italy | 0.2164 | 2,89,000 |

- இராணுவ வலிமையில் அமெரிக்காவானது தனது முதலிடத்தை மீண்டும் மிக நன்கு உறுதிப்படுத்தி உள்ளது.
- அதைத் தொடர்ந்து ரஷ்யா மற்றும் சீனா ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் உள்ளன.
- 4வது இடம் பெற்ற இந்தியா ஒரு குறிப்பிடத்தக்க இராணுவ சக்தியாக உருவெடுத்து உள்ளது.
- இதில் தென் கொரியா 5வது இடத்திலும் அதைத் தொடர்ந்து ஜப்பான் 7வது இடத்திலும், துருக்கி 8வது இடத்திலும், ஈரான் 14வது இடத்திலும் உள்ளன.
- பாகிஸ்தானின் தரவரிசை 9வது இடத்திலிருந்து 12வது இடத்திற்குச் சரிந்தது.

## THE இதழின் பாடத்தின் அடிப்படையிலான உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை 2025

- STEM துறைகளில் மிகவும் நீண்ட காலமாக முன்னணியில் இருந்த மாசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் (MIT) ஆனது, கலை மற்றும் மனிதநேயத் துறையின் தர வரிசையில் முதலிடத்திற்கு உயர்ந்துள்ளது.

- இதில் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம் ஆனது கல்வி சார் ஆய்வுகள், சட்டம் மற்றும் உளவியலில் ஆகியவற்றில் தனது முன்னணி நிலையினைத் தக்க வைத்துள்ளது.
- இதில் ஹார்வர்டு பல்கலைக்கழகம் ஆனது, பொறியியல் மற்றும் வாழ்க்கை மீதான அறிவியலில் தனது முன்னணி நிலையை உறுதிப்படுத்தியது என்ற ஒரு நிலையில் கலிபோர்னியா தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஆனது (கால்டெக்) இயற்பியல் அறிவியலில் தனது முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- கணினி அறிவியல், மருத்துவம் மற்றும் சுகாதாரம் ஆகிய இரண்டிலும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் முன்னணியில் உள்ளது.
- தனிப்பட்ட பாட தரவரிசையில் எந்த ஆசியப் பல்கலைக்கழகமும் முதலிடத்தில் இடம் பெறவில்லை.
- ஆனால் சீனா, சிங்கப்பூர், ஹாங்காங் மற்றும் ஜப்பான் ஆகியவை பல துறைகளில் சிறப்பானச் செயல்திறனை வெளிப்படுத்தியுள்ளன.

| Ranking | Top Institution | Country |
|---|---|---|
| **Arts and Humanities** | Massachusetts Institute of Technology | USA |
| **Business and Economics** | Massachusetts Institute of Technology | USA |
| **Computer Science** | University of Oxford | UK |
| **Education Studies** | Stanford University | USA |
| **Engineering** | Harvard University | USA |
| **Law** | Stanford University | USA |
| **Life Sciences** | Harvard University | USA |
| **Medical and Health** | University of Oxford | UK |
| **Physical Sciences** | California Institute of Technology | USA |
| **Psychology** | Stanford University | USA |
| **Social Sciences** | Massachusetts Institute of Technology | USA |

# மாநிலச் செய்திகள்

## ஜார்க்கண்டில் காட்டெருதுகளின் எண்ணிக்கை

- பலமு புலிகள் வளங்காப்பகத்தில் (PTR) கௌர் என்று வெகு பிரபலமாக அறியப்படும் காட்டெருதுகளின் குறைந்து வரும் எண்ணிக்கையை திரும்பவும் அதிகரிப்பதற்காக ஜார்க்கண்ட் வனத்துறையானது ஓர் ஆய்வைத் தொடங்கியுள்ளது.
- சுமார் 50-70 காட்டெருமைகள் மட்டுமே எஞ்சியுள்ள PTR தவிர, ஜார்க்கண்ட் மாநிலம் முழுவதும் காட்டெருதுகளின் எண்ணிக்கை ஏற்கனவே அழிந்துவிட்டது.
- சுமார் 1.5 லட்சத்திற்கும் அதிகமான எண்ணிக்கையிலான வளர்ப்புக் கால்நடைகள் காட்டெருதுகளின் வாழ்விடத்தை ஆக்கிரமித்துள்ளன.
- காட்டெருதுகள் என்பவை இந்தியாவில் காணப்படுகின்ற வனவாழ் கால்நடைகளில் மற்றும் தற்போதுள்ள மிகப்பெரிய மாடு இனங்களில் மிக உயரமான இனமாகும்.
- உலகளவில் காணப்படும் காட்டெருதுகளின் எண்ணிக்கையில் தோராயமாக சுமார் 85% இந்தியாவில் காணப்படுகின்றன.

- அவை IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.




## சம்மன் சஞ்சீவனி செயலி




- ஹரியானா மாநில அரசானது, 'சம்மன் சஞ்சீவனி' எனும் செயலியை அறிமுகப்படுத்தி உள்ளது.
- இந்தச் செயலியானது, 'மகிளா எவம் கிஷோரி சம்மன் யோஜனா' என்ற திட்டத்தின் கீழ் வழங்கப் படும் பலன்களின் பரவலைக் கண்காணிக்கிறது.
- அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளிகள் மூலம் 10 முதல் 45 வயதுடைய வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு மாத விடாய்க் காலப் பயன்பாட்டுத் துணிகள் வழங்கப்படுகின்றன.
- இந்தச் செயலியானது, சரியான நேரத்தில் அவற்றின் விநியோகத்தை மிகவும் நன்கு உறுதி செய்வதோடு, பயனாளிகளின் தரவைச் சேகரித்து, மாதாந்திரச் சலுகைகளைப் புதுப்பிக்கிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## 55வது உலகப் பொருளாதார மன்றம்

- சமீபத்தில் 55வது உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) வருடாந்திரக் கூட்டம் ஆனது, சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில் "Collaboration for the Intelligent Age" என்ற ஒரு கருத்துருவுடன் நடைபெற்றது.

- கால்பந்து ஜாம்பவானான டேவிட் பெக்காம், ஆடை வடிவமைப்பாளர் டயான் வான் ஃபர்ஸ்டன்பெர்க் மற்றும் கட்டிடக் கலைஞர் ரிக்கன் யமமோட்டோ ஆகியோருக்கு மதிப்புமிக்க கிரிஸ்டல் விருதுகள் வழங்கப்பட்டன.
- சமூக, சுற்றுச்சூழல் மற்றும் படைப்புகளின் முன்னேற்றத்திற்கான அவர்களின் பெரும் பங்களிப்புகளை இந்த விருது அங்கீகரிக்கிறது.
- இந்த நிகழ்வில் ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா, தெலுங்கானா, தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம் மற்றும் கேரளா ஆகிய ஆறு இந்திய மாநிலங்களைச் சேர்ந்த உயர் நிலைப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.
- சுவிட்சர்லாந்தில் உள்ள இலாப நோக்கமற்ற அறக்கட்டளையான WEF என்பது 1971 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதோடு இதன் தலைமையிடம் ஜெனீவாவில் அமைந்துள்ளது.




# விளையாட்டு செய்திகள்

## கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் 2025

KIWG medal winners

| Rank | State/UT/Team | Gold medals | Silver medals | Bronze medals | Total medals |
|---|---|---|---|---|---|
| 1 | Ladakh | 4 | 2 | 1 | 7 |
| 2 | Tamil Nadu | 3 | 2 | 0 | 5 |
| 3 | Maharashtra | 2 | 4 | 4 | 10 |
| 4 | Telangana | 2 | 1 | 2 | 5 |
| 5 | Karnataka | 1 | 2 | 1 | 4 |

- ஐந்தாவது கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் (KIWG-2025) ஆனது லடாக்கின் லே நகரில் நிறைவடைந்தது.
- இதன் முதல் கட்டப் போட்டிகளானது ஜனவரி 23 முதல் 27 ஆம் தேதி வரை லடாக்கில்

நடைபெற்ற நிலையில் இரண்டாம் கட்டப் போட்டிகள் ஆனது பிப்ரவரி 21 முதல் 25 ஆம் தேதி வரை ஜம்மு மற்றும் காஷ்மீரில் நடைபெற உள்ளன.

- தற்போது, இந்தப் போட்டியில் லடாக் நான்கு தங்கங்கள், இரண்டு வெள்ளிகள் மற்றும் ஒரு வெண்கலத்துடன் பதக்கப் பட்டியலில் முன்னிலை வகிக்கிறது.
- தமிழ்நாடு மூன்று தங்கம் மற்றும் இரண்டு வெள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

# முக்கிய தினங்கள்

## இந்தியப் பத்திரிக்கை தினம் 2025 - ஜனவரி 29




- இந்தத் தேதியானது 1780 ஆம் ஆண்டில் ஹிக்கிஸ் பெங்கால் கஸெட் எனப்படுகின்ற இந்தியாவின் முதல் செய்தித்தாள் வெளியிடப்பட்டதை நினைவு கூர்கிறது.
- ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி, "இந்தியப் பத்திரிகையின் தந்தை" என்று கருதப்படுகிறார்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Role of Print Media in the Digital Age" என்பதாகும்.
- இந்தியாவில் தற்போதுள்ள மிகப் பழமையான செய்தித்தாள் ஆன மும்பை சமாச்சார் (முன்னதாக பம்பாய் சமாச்சார் எனப்பட்டது), 1822 ஆம் ஆண்டில் முதன்முறையாக குஜராத்தி மொழியில் வெளியிடப்பட்டது.
- இந்தியாவின் முதல் தமிழ் செய்தித்தாள் சுதேச மித்ரன் ஆகும் என்பதோடு இது 1882 ஆம் ஆண்டில் G. சுப்பிரமணிய ஐயர் அவர்களால் வார இதழாகத் தொடங்கப்பட்டது.

# இதரச் செய்திகள்

## உமாமஹேஸ்வர உலோக சிற்பம்

- கர்நாடக மாநிலத்தின் உடுப்பி மாவட்டத்தில் உள்ள குந்தபுரா தாலுக்காவின் அஜ்ரி கிராமத்தில் உள்ள டகுஞ்சே எனுமிடத்தில் ஒரு உமாமஹேஸ்வர உலோகச் சிற்பம் கண்டெடுக்கப் பட்டுள்ளது.
- இது 17 ஆம் நூற்றாண்டின் போது, 12 ஆம் நூற்றாண்டின் ஒரு பாணியில் செய்யப் பட்டு இருக்கலாம்.

- இது 17 ஆம் நூற்றாண்டின் எழுத்து வடிவிலான கன்னட மொழி எழுத்து நடையைக் கொண்டுள்ளது.
- உமா மஹேஸ்வர வழிபாட்டு முறையானது 10-11 ஆம் நூற்றாண்டில் குஜராத்தைச் சேர்ந்த சோமா சர்மாவால் நிறுவப்பட்டது.
- சிறிது காலத்திலேயே, இது இந்தியத் துணைக் கண்டத்தில் பிரபலமடைந்தது.
- இது வஜ்ராயான பௌத்தத்தின் தாக்கத்திற்கு உள்ளாகியது என்பதோடு காதல் என்ற பொருளானது அதன் மையக் கருப்பொருளாகும்.



## கோடீஸ்வரர்களின் வருடாந்திரச் செல்வ வளம் - ஆக்ஸ்பாம் அறிக்கை




- பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் போது இந்தியாவிலிருந்து எடுக்கப்பட்ட செல்வ வளங்களை "Takers, Not Makers" என்று தலைப்பிடப் பட்ட ஆக்ஸ்பாம் இன்டர்நேஷனல் அறிக்கை எடுத்துரைக்கிறது.
- 1765 மற்றும் 1900 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், இங்கிலாந்து நாடானது இந்திய நாட்டில் 64.82 டிரில்லியன் டாலர் பணத்தைச் சுரண்டியது என்ற நிலையில் அதில் 33.8

டிரில்லியன் டாலர் முன்னணியில் இருந்த 10% பேருக்கு சென்றது.

- 1750 ஆம் ஆண்டில், இந்தியாவானது உலகளாவியத் தொழில்துறை உற்பத்தியில் 25% பங்கினைக் கொண்டிருந்தது, ஆனால் 1900 ஆம் ஆண்டில் இது 2% ஆகக் குறைந்தது.
- ஆனால் 2024 ஆம் ஆண்டில், கோடீஸ்வரர்களின் செல்வ வளம் 2023 ஆம் ஆண்டினை விட மூன்று மடங்கு வேகமாக அதிகரித்தது.
- 3.5 பில்லியனுக்கும் மிக அதிகமான மக்கள் ஒரு நாளைக்குச் சுமார் 6.85 டாலருக்கும் குறைவான வருமானத்தில் வெகு நாட்களாக வாழ்கின்றனர்.
- பணக்காரர்களில் 1% பேர் தற்போது உலக மக்கள்தொகையில் 95 சதவீதம் பேரை விட அதிக செல்வத்தைக் கொண்டுள்ளனர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★